**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**CC. 169/2012 P.W.10/L.W.12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. பிரபாகரன் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 02.12.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது திருச்சி சரக சிறப்பு நுண்ணறிவு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2011ம் வருடம் கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் காவல்நிலைய ஆய்வாளராகபணிபுரிந்தபோது எனக்குமுன்பாக இருந்த ஆய்வாளர்கள் பதிவுச் செய்து புலன்விசாரணை முடித்து நிலுவையில்வைத்திருந்த காவல்நிலையக்குற்ற எண்.84/2011, சட்டப்பிரிவுகள் 406, 420 @ 381 இ.த.ச 1860 ன் கீழ் வழக்குப்பதிவு செய்த வழக்கினை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்

2. வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்தபோது அவர்கள் முன்னர் இருந்த ஆய்வாளரிடம் சொல்லியிருந்த விவரங்களையே என்னிடமும் கூறியதால் தனியாக பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம், வாக்குமூலங்கள் தனியே பதிவுச் செய்யவில்லை. பின்னர் வழக்கின் புலன்விசாரணை முடித்து வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது 381 இ.த.ச 1860 ன் கீழ் 19.11.2011 ம்தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை :**

1. நான் வழக்கின் விசாரணையை 03.08.2011 அன்று எடுத்துக்கொண்டேன். எனக்கு முன்னர் இவ்வழக்கினை விசாரணைச் செய்து வைத்திருந்த ஆவணங்களை நான் பார்வையிட்டேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் புகாரானது காலதாமதமாக கொடுக்கப்பட்டது எனது விசாரணையில் தெரிய வந்ததா என்றால் ஆவணங்களை சரிபார்த்து அதன் பிறகு புகார் கொடுத்துள்ளது தெரிய வந்தது.

2. மேற்படி புகாரில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீதோ அல்லது அவர் மீது சந்தேகம் இருப்பதாகவோ எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ காலகட்டத்தில் வேறு நபர்களும் மேற்படி நிதிநிறுவனத்தில் பணிச்செய்து வந்தார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் K.P.N நகை கடை உரிமையாளரை வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையில் நான் சொன்ன நேரம் குறித்து எந்த சாட்சி மூலம் மேற்படி நேரத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சொல்லப்படவில்லை.

3. நகைகள் வைக்கப்பட்டிருந்த லாக்கர் உடைக்கப்பட்டிருந்ததா என்றால் இல்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக எந்த சாட்சியமும் வாக்குமூலமும் அளிக்காத சாட்சிகளின் விசாரணையின் அடிப்படையில் இந்த குற்ற இறுதிஅறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த குற்ற இறுதி அறிக்கை ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.